

ஆர்.ஏ.நாயகியின்

# சரம்

## கவிதைத் துளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரம்

## கவிதைத் துளிகள்

எழுதியவர்
ஆர். ஏ. நாயகி

வெளியீடு
நலன் அபிவிருத்திச் சங்கம்
புனித யாகப்பர் மகளிர் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் – சாரம்
ஆசிரியர் – திருமதி றிச்சேட் அடைக்கலநாயகி
17/2, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
முதற் பதிப்பு – ஜனவரி 2004
பதிப்புரிமை – திருமதி றிச்சேட் அடைக்கலநாயகி
வெளியீடு – நலன் அபிவிருத்திச் சங்கம்
புனித யாகப்பர் மகளிர் வித்தியாலயம்
அச்சகம் – லங்கா பப்ளிஸிங் ஹவுஸ்
அட்டைப்படம் – ம.சாம் பிரதீபன் (0777 – 243597)
விலை – 100/=

Name of Book - Saram
Author - Mrs. Richerd Adaikalanayaki
17/2, Centrel East Road,
Gurunagar, Jaffna.
First Edition - January 2004
Copy Right - Mrs. Richerd Adaikalanayaki
Published by - Welfare Development Socity
St. Jame's Gilrs School
Printers - Lanka Publishing House
Colombo 15 Tel: 2520447
Cover Design - M.Sam Pratheepan (0777-243597)
Price - 100/=


சாரம் – ஆர். ஏ. நாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமர்ப்பணம்

தந்தையும் தாயுமாகி நின்று, தமிழ்ப்பாலூட்டி,
'முந்தியிருப்ப அவையத்து' வைத்த அமரர்
எந்தையின் திருவடிகளுக்கு இம்மலர்
சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியீட்டுரை

புனித யாகப்பர் மகளிர் வித்தியாலய நலன் அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் திருமதி றிச்சேட் அடைக்கலநாயகியின் "சரம்" என்னும் கவிதை நூலினை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

இது இவரது முதலாவது நூல் வெளியீடாக அமைந்துள்ள போதிலும் இன்று நேற்றல்ல பல காலமாகவே இவருக்குத் தமிழ் இலக்கியங்களோடு மிகுந்த ஆர்வம் இருந்து வந்தது. கவிதை கட்டுரை பேச்சு சிறுகதை நாடகம் என ஒரு நீண்ட இலக்கிய ஆற்றல் இவருக்குண்டு.எமது பாடசாலை பங்குபற்றிய பல கலை இலக்கியப் போட்டிகளில் இவரது இலக்கியப் படைப்புக்கள் முதனிடம் பெற்றதும் பலராலும் பாராட்டப்பட்டதும் மறந்துவிட இயலாதது. எமது மாணவச் செல்வங்களின் ஆக்க இலக்கிய வளர்ச்சியில் திருமதி றிச்சேட் அடைக்கலநாயகியின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

குருநகரைச் சேர்ந்த இவர் 1998 காலப்பகுதிகளில் இருந்து ஜேர்மனியில் தனது வாழ்நாட்களைக் கழித்திருந்தாலும் அவர் கொண்ட தமிழ்ப்பற்று பல இலக்கியங்களை புலம்பெயர் மண்ணிலும் படைக்க வழிகோலியிருந்தது. இந்த வகையில் தாயகத்திலும் புலம்பெயர் மண்ணிலும் இவர் படைத்த கவிதை இலக்கியங்கள் பலவற்றை அடக்கியதாகவே இவரது இந்த "சரம்" கோர்க்கப்பட்டிருக்கின்றது.

புனித யாகப்பர் மகளிர் பாடசாலையின் பழைய மாணவியும் எமது நலன் அபிவிருத்திச் சங்கத்தின் அங்கத்தவருமாகிய இவரது நூலினை நாம் வெளியிட்டு வைப்பது பொருத்தமும் எமது கடமையும் ஆகும். எனவே மேலும் இவர் பல இலக்கியப் படைப்புக்களை படைத்து தமிழுக்கும் பாடசாலைக்கும் தனது ஊருக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென்று இவரை வாழ்த்தி நிற்கின்றோம்.

கி.கிறிஸ்தோப்பர்
தலைவர்
நலன் அபிவிருத்திச் சங்கம்
புனித யாகப்பர் மகளிர் வித்தியாலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

திருமதி றிச்சேட் அடைக்கலநாயகி அவர்களின் கவிதைப் படைப்பு வெளிவருவதையிட்டு பங்குத் தந்தை என்ற வகையில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவர் குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் சில காலம் ஜேர்மனியில் வாழ்ந்து வந்தார். அங்கு அவர் வாழ்ந்த பொழுதிலும் தமிழ்ப்பற்றும் கவிதை ஆர்வமும் அவரைப் பற்றியிருந்தது பற்றி நான் அவரைப் பாராட்டுகின்றேன்.

அவரின் கவிதைகள் மதம் நாட்டுப்பற்று விடுதலை அமைதி என்ற பலதரப்பட்ட அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. கருத்தாழமும் சிந்தனையைத் தூண்டுகின்றவையுமான இவரது கவிதைகள் போற்றப்படவும், இவரின் ஆற்றல் திறமைகள் வளர்க்கப்படவும் வேண்டியவை. மனதிலே ஊற்றெடுக்கின்ற கவிதை மழை பலரின் உள்ளங்களுக்கு உந்துசக்தியாகவும் இருக்கும் என்பது என்னுடைய நம்பிக்கை.

இவரின் முயற்சிகள் வெற்றியளிக்கவும் இன்னும் பல ஆக்கங்கள் வழியாக நல்ல ஆணித்தரமான கருத்துக்களினால் பலருக்கு அளப்பரிய நன்மைகள் கிட்ட வேண்டுமென்றும் வாழ்த்தி நிற்கின்றேன்.

அருட்திரு.ஆர்.செ.சகாயநாயகம்
பங்குத் தந்தை
குருநகர் புனித யாகப்பர் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை

## என் மனதில் நின்று !

எனை ஏற்றி வழி காட்டி...

வண்ணத் தமிழே - நான்
வணங்கும் இன்பத்தமிழே - தன்
நிகரில்லாத் தனித் தமிழே - என்
தாய் மொழியே வணக்கம் - எம்
அடைக்கல நாயகியே உந்தனுக்கும் வணக்கம்.

அழகு தமிழின் ஆலயமே!
புலம் பெயர் வாழ்வின் புனிதமே !
அறம் ஊட்டி - எம் புலம் காட்டும் பதியே!
வண்ணத் தமிழினைப் புகட்டி வளம் சேர்க்கும் தளமே !

கற்கையும் களிகொள் நெறியும்
கனிவும் கலை பல செறிவும்
செப்பும் செந்தமிழ் களமே - எங்கள்
தமிழ் கொஞ்சும் தமிழ் அடைக்கலநாயகியே.

பிறநாடு புகினும் உறவாடும் தமிழர்
கரமிணைத்து தேசத்தின் நினைவைத்திரட்டு
தெள்ளு தமிழால் அதை ஊட்டி
கலந்தூட்டும் தருவே, கலையூட்டும் கருவே
பிறப்பெடுத்த உன்னால், உன் ஊருக்குப் பெருமை
அரங்கூடும் எம் தமிழாலயத்துக்குப் பெருமை
ஏன்? எங்கள் அகத்துக்கும் பெருமையன்றோ.

வாழி நீ யென்று வாழ்த்த அழியாத் தமிழ் கோர்த்து
உன் கதைகள் கவிதைகள் அனைத்தும் ஆனந்தமாய் இன்று
சூழத் தமிழர் மனம் இணைந்து எம்
சூரியப் புதல்வர்கள் தம்
சுதந்திர சுவடு தொட்டு வெல்கத் தமிழ் என்று
வாழ்த்தி வணங்குகின்றோம்.

கி. செல்வராஜா
நிர்வாகி - தமிழாலயம் கில்கிஸ்லிங்கன்
ஜேர்மனி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளை

பாராட்டுரை

சரம் கண்டேன். இருகரம் கூப்பி வாழ்த்தி நின்றேன். சரம் தொடுக்கப்பட்டு பல கழுத்துக்களில் ஆரமாக அமைவதும் அதுவே பலருக்கு ஆழப் புதைந்து அழிக்கும் சரமாக அமைந்ததையும் அவதானிக்க முடிந்தது.

"நிலத்தில் பிறந்தமை கால் காட்டும் - காட்டும்
குலத்தில் பிறந்தமை வாய்ச்சொல்."

இது அடைக்கல நாயகி அவர்களின் கவிதைப்பிறப்பில் நிதர்சனமாகின்றது.

களத்தில் இருந்திருக்க வேண்டிய கவிதை தாயொருத்தி நிலத்தால் பிரிந்து ஐரோப்பிய மண்ணில் தடம் பதித்திருந்த போதும் தன் தமிழார்வத்தை தக்க வேளைகளிலெல்லாம் தனித்துவத்துடன் படைத்திருக்கின்றமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். மதியம் திரும்பி விட்டால் மந்திரம் கூட அனுபவ முத்திரையே. இவ் வகையில் இளமையில் தான் தானாகவே இழக்க முனைந்த கவி ஆற்றாமை மதியம் திரும்பிய பின் மகத்தான பிரசவங்களாக இவர் தந்துள்ளார். சமத்துவ நாட்டை வீட்டை தர்மத்தை இவற்றின் மேலாக நம் தமிழ் உயர்வை நேசித்த அற்புதப் படைப்பாளியான இவரின் கவிதைத் தொகுப்பில் பல உயர்வுகள் என்னைச் சிலிர்க்க வைத்தன.

வாழ்க! அவர் தமிழ்ப்பணி
வளர்க! அவரது கவியாற்றல்
அமையட்டும் அவரது இலட்சிய ஈழம்

எஸ்.எஸ்.தங்கராசா
யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புரை

சரம் என்னும் நூலுக்கு
பூச்சரம் கட்ட நான் துணிகின்றேன்
அச்சரம் தவறாமல்
பொன் சரம் கொண்டது இந்நூல்

பாடசாலையில் பழைய மாணவி
தேடற்கரிய சொல்லாம் கொண்டு
பாடப்பெற்ற கவிதைகள்
நாடளாவிப் பொலிவு பெற என் வாழ்த்துக்கள்.
பாலகன் இயேசுவில் பாடத் தொடங்கி
சீலனாம் மில்லர் தொட்டு
காவலன் மகிமை போற்றி
நாவலன் போற்றும் வன்மை
நயம் படச் சொல் சேர்த்து
சங்கம் பல கண்ட தமிழை
பொங்கி எழச் செய்து
தங்கம் போல் புடம் போட்டு
இங்கிதமாய் சொல் பதித்து
ஆற்றலாய் வனம் செய்து
போற்றற்கரிய இந்நூல்
நாற்றிசையும் மணம் பரப்ப
போற்றுகின்றேன் ஆசிக்கின்றேன்

திருமதி அ.செ.சௌந்தரநாயகம்
உப அதிபர்
யாழ்.புனித யாகப்பர் மகளிர் வித்தியாலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

எப்படி என் முகத்தை அறிமுகப்படுத்துவதென்பதே புரியவில்லை. ஏனெனில் நான் மேதாவியோ பட்டதாரியோ பெரிய அறிவாளியோ அல்ல அப்படியென்றால் எப்படி எழுதத் துணிந்தாய்? என்று கேட்கிறீர்களா? என் அன்னை மேல் நான் வைத்த பற்று என்னை எழுதத் தூண்டியது . ஆம் தமிழ்த்தாய் மேல் நான் கொண்டிருந்த அளவில்லாப் பாசமே அவள் விரலை என்னிரு கைகளாலும் பற்றியபடி அடிமேல் அடிவைத்து நடைபழக வைத்தது நடை பழகும் குழந்தை விழுந்து விட்டால் எவரும் பழிப்பதோ, பரிகசிப்பதோ இல்லை. அந்தத் துணிவுடனேயே இச்சிறு மலரை அச்சேற்ற முடிவெடுத்தேன். என் உணர்வுகள் உருவமாகிச் சில பத்திரிகைகளிடம் சென்ற போது எவ்வித மறுப்புமின்றி அவை வரவேற்கப்பட்டதால் என் எழுத்தையும் ஏற்பார்களென்ற நம்பிக்கை என்னுள் துளிர் விட்டது.

என் சிறு வயதிலேயே பாரத, இராமாயணக் கதைகளை, (மகாபாரதத்தில் கதைக்குள் கதையாக வரும் பல கதைகளை) எனக்குச் சொல்லித் தந்து தமிழில் பற்றுக்கொள்ள வைத்தவர் எனதருமைத் தந்தையார். திருவாளர் செபமாலை முத்து அவர்களே. கணக்கு, விடுகதைகள் முதலியவற்றைக் கூட பாட்டாகவே சொல்லி என்னிடம் விடை கேட்பார் அதுவே என்னை கவிதையிலும் வாசிப்பிலும் ஆர்வம் கொள்ள வைத்தது அவர் போட்ட விதைக்கு நீர்வார்த்து பசளை இட்டவர்கள் மதிப்பிற்குரிய எனது ஆசிரியப் பெருந் தகைகளான திருமதி எசக்கியல் தலைமை ஆசிரியை சங்கைக்குரிய மதர் வின்சென்டிப் போல், பண்டிதர் திருவாளர் ஞானப்பிரகாசம் ஆகியோர்கள் ஆவர். இவர்களில் சிலர் இப்போது இறைவனடி சேர்ந்திருந்தாலும் என் மனதில் என்றுமே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் ஆசியுடன், இறைவனின் துணையுடன் எனது கணவர் பிள்ளைகளின் ஊக்குவிப்பாலும், தமிழறிந்த பெரியோர்களின் ஆதரவு கிடைக்குமென்ற நம்பிக்கையாலும் என் சிந்தையில் பூத்த சிறு மலர்கள் சிலவற்றை சரமாகத் தொடுத்து தமிழ்த் தாய்க்குச் சூட்ட வந்தேன். பூசைக்குச் சேரக் கூடாத பூக்களேதும் என் அறியாமையால் சேர்ந்திருந்தால் மன்னிப்பீர்களென நம்புகின்றேன். தமிழ்த் தாய்க்கும் தமிழ்ப் பெரியோர்க்கும் எனது அன்பும், நன்றியும், வணக்கமும் என்றும் !

திருமதி.ஆர்.ஏ.நாயகி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரம் கதை சொல்லும் சரம்

ஆர்.ஏ.நாயகி
ஆருக்கும் தெரியாமல்
மார்புக்குள் புதைத்து வைத்து
காலத்தால் அழியாக் கவி படைத்தார்
யாழ்ப்பாணக்குருநகரில்
பூப்போல வந்துதித்து
விருப்போடும் துடிப்போடும்
களிப்புடனே பணிபுரிந்து
மதத்திற்கும் - ஊர்
சிறப்பிற்கும்
உளத்திற்கும் - கல்வி
வளத்திற்கும்
திறத்தோடு அரும் பாடுபட்டார்
தன் தேசம் பிரிந்து
அந்நியரின் தேசத்துள்
ஆட்பட்டுக் கிடந்து
நேசத்தில் தேசமும்
சுவாசத்தில் வேதமும்
எண்ணத்தில் மனிதமும்
கன்னத்தில் ஈரமுமாய்
கனன்று வெடித்து
அனலாய்த் தெறித்த உணர்வுகளை
அழகாய்க் கோர்த்து
சரமாய்த் தந்தனள்.
சரத்தின் முத்துக்கள்
ஆயிரம் கதை சொல்லும்

- கரையோரக் கறுப்பன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரம் – ஆர். எ. நாயர்

# சரம்

கவிதைத் துளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் வாழ்த்து

தானொக்கும் தந்தைக்கும் தற்பரனார் சுதற்கும்
தீனாக்குருவத்தில் தீரத்தை ஈந்திடவே
பூனோக்கி வந்திட்ட புண்ணியராம் ஆவிக்கும்
வானொக்கும் வணக்கம் வையம் உள்ளளவே

## காப்புப் பா

கன்னிமரித்தாயும் கைத்தாதை சூசையும்
பன்னிருவருள்ளும் பாங்குடனே முன்னின்று
சென்னிதனை ஈந்து செகமதிலே சிறந்திட்ட
என்னரு நகர்க் காவலரும் என்றென்றும் காப்புத்தானே!

## கிறிஸ்து பிறப்பு

*மாடடைக்குடில் வேண்டாம்.*
*பாடையாய் மாறாதிருக்கப்*
*பாமரர் நெஞ்சினில் பிறந்திடு*
*மெத்தக்குளிரான மார்கழி வேண்டாம்*
*யுத்த இருள் அச்சுறுத்தும்*
*இக்காலமே போதும்*
*இடையருக்கு நீ*
*அறிவிக்கப்பட வேண்டியதில்லை*
*படைதிரட்டுவோருக்கு அறிவிக்கப்பட வேண்டும்*
*மூவரசர் உனைத் தேடினர்*
*இப்பூவரசர் காண்பரோ உனை?*
*சாந்தி சமாதானம் பாடினர் வானவர் அன்று*
*ஏந்தி நிற்கிறோம் கை அகதிகளாய் இன்று*
*எம் மனதில் வந்து பிறப்பாயா?*
*இம் மண் சிறக்க எம்முடன் இருப்பாயா?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரம் — ஆர். ஏ. நாயகி

## மீண்டும் பிறப்பாயா?

இங்கு வந்து மீண்டும் பிறப்பாயா?
அங்கிங்கெனாத படி எங்கும் நிறைந்தவனே!
இங்கு வந்து மீண்டும் பிறப்பாயா?

உலகின் ஒளியாய் வந்தவனே
அலகையின் ஆட்சியை அழித்தவனே
கலகம் நிறை கயவரெம் உள்ளத்தில்
நிலவென வந்து நீ உதிப்பாயா?

ஆவின் குடிலில் அன்று நீ பிறந்தாய்
பாவிகளாய் ,பராரிகளாய் பரதேசிகளாய்
சாவின் விளிம்பில் சஞ்சரிக்கும் எம்மைத்
தாவிப்பிடித்துக் காத்திடவே - இங்கு
மார்கழிக்குளிரில் மலர்ந்தாய் அன்று
யார் துடைப்பார் எம் கண்ணீரென்று
ஆர்த்தெழும் ஆயுத அரக்கன் பிடியில் இன்று
பார்த்துப் பரிதவிக்கும் பாரினைக் காக்கவென்று

அன்பும் அறமும் ஆட்சி செய்ய
இன்பமும் ஈகையும் எங்கும் நிறைய
துன்பமும் துயரமும் தூரப் போக
வன்முறை ஒழிந்து வளமை சிறக்க

எம் எல்லோர் இதயத்திலும் நீ பிறக்க வேண்டும்
இம்மானிலம் உன்னருளால் சிறக்க வேண்டும்
தம்மைப் போல் பிறரை நேசிக்க வேண்டும்
உம்பதமே உலகெல்லாம் பூசிக்க வேண்டும்.

(தொடுவானம் ஜேர்மனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலை தாராய்

மார்கழிக்குளிர் வேண்டாம்
மாவீர நெருப்பிடை வந்து பிறந்திடு
மாடடைக்குடில் வேண்டாம்
மனிதம் மறந்த மனங்களில் பிறந்திடு
இடையர் இங்கில்லை இறைதூதர் அறிவிக்க
இடர் சுமர் அகதிகள் உள்ளோம்
நற்செய்தி அறிந்திட முன்னிட்டி இருந்தது
முதல்வனே! நீ உறங்கிட
வன்னிச்சிறார் என் செய்தார்?
மரநிழலில் கிறங்கிட
குற்றமற்ற உயிர்கள்
கொன்றொழித்தான் ஏரோது
சுற்றம் நட்புறவைக்குண்டழிக்குது இப்போது
தந்துள்ளாய் விடிவெள்ளி
ஒன்று நாம் காண
'தமீழீழக்'குடில் வரை
வழிகாட்டுமது நிச்சயமாக
பொன்தூபம் மீறை
எம்மிடத்தில் இல்லை
பொற்பாதம் தந்தோம்
கண்ணீர் செந்நீர் தொல்லை
மனுக்குலம் மீட்க
ஒளியாக வந்தாய் அன்று
எம்குலம் மீட்டு
விடுதலை தாராய் இன்று.

**(தொடுவானம் ஜேர்மனி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்புறா பறந்திடும்

அமைதிதர அகிலம் வந்தாய்
அன்பால் ஒன்றாக்க விழைந்து நின்றாய்
சமநிலை சமாதானம் நீதி உண்மை
சதா தேடித் தவிக்கின்றோம் நாம்
எம்முள்ளே இவை வளர்த்து
எடுத்து நாம் கொடுப்பதற்கு
ஏன் மறுக்கின்றோம்? புரியவில்லை
நாட்டிலும் வீட்டிலும் நானிலத்திலும்
நாடி நிற்கும் இவை நிறைய மனக்
கொட்டிலில் வந்து நீ பிறந்திடு
கூட்டுள் குஞ்சாய் இவை பொரித்துக்
குவலயம் எங்கும் வெண்புறா பிறந்திடும்

**(தொடுவானம் - ஜேர்மனி)**

## பதில் சொல்

இத்தரை மீட்க வந்தவனே!
எளியோர்க்குக் காட்சி தந்தவனே?
சத்தியம் சாந்தி மேவிடவே
தர்மமும் தழைத்து ஓங்கிடவே
எத்தனை வழிகள் நீ கொடுத்தாய்?
ஏறெடுத்தும் நாம் பார்க்கவில்லை
புத்தி கெட்ட எம்மிடம் பிறப்பாயா?
பூதலத்தை மாற்றி அமைப்பாயா?
கத்திகள் கலங்கள் அழிப்பாயா? இல்லை
யுத்தச் சிலுவையில் மீண்டும் இறப்பாயா?

சாரம் – ஆர். ஏ. நாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளி விழா அந்தாதி

அன்பெனும் அமுதத்தை அகிலத்திற் கூட்ட வந்தோன்
துன்புற்ற மாந்தர்க்கு நற்செய்தி கூற வந்தோன்
மன்னித்திடும் மாண்பை மானிலம் சொல்ல வந்தோன்
அன்னை மடியில் ஆடுகள் முன்னிட்டியில் ஆதரவாய்க்
கண்ணயர்ந்தான்

கண்ணயர்ந்தான் காருண்ணியன் கந்தல் துணி சுற்றப்பட்டு
பண்ணிசைத்தனர் வானவர் பாதம் பணிந்தனர் ஆயர்கள்
விண்ணில் தோன்றியது விடிவெள்ளி வேந்தர் மூவரும் விரைந்தனர்
மண்ணை மீட்க வந்த மாபரனைக் கண்டு தொழுதனர்

தொழுதனர் இன்னும் பலர் தூயவனைக் கண்டதினால்
அழுதான் ஏரோதன் ஆட்சி போகுமென்பதினால்
விழுகின்றோம் நாமும் பல வேளை வீம்பிலும் அறியாமையிலும்
எழுந்திடுவோம் ஏந்தி நிற்போம் என்றும் அணையா அன்பு விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலன் பிறந்தார்

பாலன் பிறந்தார் பாவம் களைந்தார்
காலம் கனிந்தது கன்னி ஈன்றாள்
பாலம் அமைந்தது பாருள்ளோர் மீண்டனர்
தூதர் போல் நாமும் துதிகள் பாடுவோமா?
ஆயர் போல் நாமும் ஆண்டவனைப் பணிவோமா?
மூவர் போல் நாமும் முன்னொளி காண்போமா?
ஏரோது போல் நாமும் ஏற்காது மறுப்போமா?
யாராக நாம் வாழ்வோம்? ஆராரோ பாலகனே!
குழந்தையாய் மாறுவோம் எளிமையை அணிவோம்
அழுகின்ற கண்கள் துடைப்போம்
அன்பாம் இறையாம் ஒளியை
அகிலம் முழுதும் ஏற்றிடுவோம்!

## அன்னைத் தமிழ்

அன்னைத் தமிழே! அழகு பல நிறைந்தவளே!
அமிழ்தாகி நின்று அறிவு முரசறைந்தவளே!
உன்னினிமை என்னென்பேன்? உன்னிளமை என்னென்பேன்?
உன்வளமை என்னென்பேன்? உன்வலிமை என்னென்பேன்?
என்னைப் பெற்றவளே! என்றும் பெருமைக்குரியவளே!
உன் மகவாய் நான் பிறந்தது எந்தன் பெரும் பேறே
என்னதான் எண்ணினுமதை எடுத்துச் சொல்லாக்க
கன்னலாய் வருகின்றாய் கவிதைத் தேன் சுரக்க
உன் திறன் கூறுவதற்கு உன்னிடமே பொருளுண்டு.
எட்டவில்லை என் சிறுமதிக்கு எடுத்து நான் இயம்புதற்கு
வன்முறையால் அழிந்திடாய் வசைமொழியால் தேய்ந்திடாய்
தென்னவளே! என்னவளே! இன்னுயிர் அன்னையவளே!
நின்புகழ் தனை நிதம் பாடும் நெஞ்சங்களில்
நின்றிடுவாய் , நிலைத்திடுவாய், நித்தம் மலர்ந்திடுவாய்!

சாரம் — ஆர். ஏ. நாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைச் செல்வம்

மழலை எனும் மொழியாம்
மயக்கம் தரும் சிரிப்பாம்
பழகு தமிழ் இனிப்பாம்
பாலின் மேலாம் சுவையாம்
மெழுகு சிலை அழகாம்
மேவிவரும் முகிலினின்
றொழுகு நீரை ஒப்பும்
உயர் வடிவ முகமாம்
இளந்தளிரின் பசுமை
இன்சுடரின் ஒளிர்மை
வளர்ந்தே வரு மதியின்
வண்மை மிகு கலைகள்
சலசலத்தே ஓடும்
தண்மை நிறை நதியின்
உளத்தே உள்ள
ஒப்பற்ற செல்வம்
இவையனைத்தும் கொண்டே
ஒருகுழந்தையாக்கி
அவைதனிலே விட்டான்
அவனியிலே இன்பம்
சுவைத்திடவே இன்னும்
சுபீட்சமதாய் வேறு
எவை உனக்கு வேண்டும்?
என்றுமே கேட்டான்.

## எமது பெருமை மிக்க பழமை

எந்தையர் வாழ்ந்திட்ட ஏற்றமிகு நிலையினை
சிந்தையில் கொள்ள செருக்கது மீறுமே
முந்தைய நாளில் முன்னவர் செய்திட்ட
விந்தை மிகு செயல்கள் வியக்க ஏதுவாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிற் சிறந்து ஆன்றோராய் ஒழுகி
நறுமணம் கமழ் தொல்காப்பியம் புனைந்து
சிறப்பாய் சிலப்பதிகாரம் சீர்நிறை திருக்குறள்
மறப்பதற்கிலா மாண்புடை நைடதம்

அகநானூறு, புறநானூறு ஆத்திசூடி ஐம்பெருங்காப்பியம்
வகைவகையாய்த் தந்து வாழ்வுக்கு வழி வகுத்துப்
பகைவர் புறமுதுகிட்டுப் பஞ்சையராய்ப் பரந்து
திகைத்துக் கலங்க வைத்த தீரமும் பூண்டு.

அறத்தால் திறந்தார் எம் அன்னை தந்தையர்
முறத்தால் புலி சாடினாள் முத்தமிழ்ப் பெண்
புறத்தால் புண்படின் பிடுங்குவேன் கொங்கை என
மறத்தாய் எழுந்ததை மறக்கற் பாலதோ?

இமயத்தில் புலிக்கொடி இலங்கையில் தமிழ்க்கொடி
அமைதிரை மேவும் ஆழிக்கப்பால் அரசாட்சி
உரோமை கிரேக்கம் மேலைத்தேயமெங்கும்
தாமோடித்தன வணிகம் செய்த மேன்மை

மெத்தவுமே நினைக்கின்றோம் முந்தையர் சீரதனை
சத்தியத்தை மறந்தோம் சமத்துவம் இழந்தோம்
சொத்தாம் ஒற்றுமையைச் சோர்வுறவே விட்டோம்
செத்த பாம்பாயின்று சீரழிந்தே வாழுகின்றோம்.

ஒருமையை உணர்வோம் ஒழுக்கத்தை ஓம்புவோம்
பெருமை பேசி வாழும் பேய்க்குணம் ஒழிப்போம்
கருமை கொள் காலமது கறுவியே கழிந்திட
திருவாம் மனிதம் பேணியே திகழ்ந்திடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்

தாழ்விலா தகைமை சேர் தம் பெருமைகுலையா
வாழ்வாங்கு வாழ வழி பல சொன்னார் - வாழ்வை
வளமாக்க வலிதாக்க வண்மை நிறை உண்மையின்
களமாக்கலாம் காண்.

ஒழுக்கம் ஓம்பப்படும் உயிரினும் மேலதாய்
விழுப்பம் தரலால் என வள்ளுவன் - அழுக்கை
அகற்று விதமாய் அறைகூவல் விடுத்தான்
மகற்குச் சாற்றுவாய் நீ.

மழலைக் கூட்டுமமுதுடன் உண்மையை
அழலையகற்றும் பண்பினை அன்னை - ஆழமுடன்
தானுட்டி வளர்க்கத் தனையன் தரணியின்
ஊனுட்டம் ஆவான் உணர்.

நடைபயிலுங் கால் நல் வழியைத் தந்தை
தடையின்றித் தான் காட்டி நிற்கின் - மடையின்
வெள்ளமெனப் பாயும் மேல் சால் ஒழுக்கம்
உள்ளமாம் வயலினிலே.

உண்மை உரை என்ற ஓராசான் சொல்லை
வண்மையாகக் கடைப்பிடித்தான் லிங்கன் - பண்பு சேர்
பெருந் தலைவன் ஆனான் அடிமை விலங்கறுத்த
அருந்தலைவன் அவனைப் போல் ஆர்

மாது மது மாமிசம்மாதாவின் சொற்படி
தீதென விலக்கிய தீரன் காந்தி - யாது
செய்திவன் தேசங்காத்தான் என்பதை
வையம் முழுதுமே விளம்பும்

வாய்மையைக் காத்த அரிச்சந்திரன் வலிமை நிறை
தாய்மையுடன் கற்பினைத் தனதாக்கிய சீதை - தூய்மை
நிறை வாழ்வைக் கொண்டார் புகழைப் பாரில்
குறைவில்லாமல் கண்டார்.

சாரம் — ஆர். ஏ. நாயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயர்ச்சியுடன் உயர்ச்சியுடன் முழுமனிதனாய் ஒருவன்
அயர்ச்சி இன்றி வாழ்ந்திட அவனுக்குப் - பயிற்சி
அளித்திடுதல் என்றும் அன்புசால் மறையதன்
வெளிப்பாடே தான்.

உன்னை போல் பிறரை நேசி என்ற இயேசு
அன்புநிறை அகிம்சை போதித்த புத்தன் - வன்செயல்
ஒன்றையுமே செய்யாதே என ஓதும் நபிகள்
நன்றாக வாழவே சொன்னார்.

எல்லாம் கேட்டோம் எங்களது வாழ்விலே
அல்லாவை மறந்தோம் அன்பினைத் துறந்தோம் - பல்லாயிரம்
பணம் படைத்தால் போதும் பதவியும் வேண்டும்
பிணம் போலானோம் பூமியில்.

நான் பெற்ற இன்பம் பெறவேண்டும் நானிலம்
தான் என்ற எண்ணம் தகர்ந்திட வேண்டும் - வான்
சூழ்ந்திருக்கும் வையம் முழுதுமே அன்பொழியில்
ஆழ்ந்திடவே வேண்டும்.

போதைப் பொருள் போக்கிரிகள் சேர்க்கை போயொழிந்து
தாதை சொன்ன தவவழி தான் நடந்து - வாதை
புரிவதை தவிர்த்துப் புவியினில் யாவரும்
உரிமையாய் வாழ வழி செய்யின்.

உயர்ந்திடும் உலகம் ஒவ்வொரு நாடும்
நயந்தரும் வாழ்வை நல்கிடும் மக்களுக்கு - ஆய்ந்து
அறிவோம் அறிஞர் வழி செல்வோம் மறந்தும்
பறியோம் மற்றோர் வாழ்வை.

ஏற்றத் தாழ்வு மறைய ஏழை செல்வர் ஒழிய
சாற்றிடுவோம் சாதி சமயப் பிரிவினை நீங்க - ஏற்றமிகு
ஒழுக்கம் ஒவ்வொருவர் வாழ்விலும் நிறைய
விழுப்பம் உண்டாம் வையத்திற்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னி மன ஏக்கம்

தூது கொணர்வாய் தோழி! எனத்துடிக்கும்
மாது என் மனத்துயர் மாற்றிடு- தாது
சிந்துகின்ற மலர் சூடாச் சேயிழை கரம்பற்ற
வந்தாரில்லை அவர்

காரிகையே! கண்ணே! கற்பகமே! என்றன்
தூரிகை கொண்டெழுதாச் சித்திரமே! - ஆருயிரே!
அன்றிலை ஒப்ப அகலாது அமைவோம்
என்றெல்லாம் செப்பியதைச் சொல்

பசலை பூத்துப் பைங்கொடியாள் தன்மேனி
வசமிழந்து வாடுவதைத்தான் விளம்பி - நாசஞ்செய்
வேங்கையை வென்ற விறல் மார்பன் தன்னிடம்
மங்கையே! மடல் பெற்று வா.

கைவளை நழுவக் காற்சலங்கை ஒலியிழக்க
மைவிழி கலங்கி மயக்கமாட் கொள்ளுவதைப் -
பொய்யுரைத்து
போனவர் வருவரெனப் பொலிவிழந்து நிற்பதனை
தேனிகர் மாதே செப்பிடுவாய்.

பஞ்சவர்ணக் கிளியே! பூசமிகு பாங்கியே!
வஞ்சி என் வாட்டமது போக்கிடவே - கெஞ்சி
அழுதேனும் அவரை அழைத்து வந்திடடி
தொழுதேனுன் பாதம் காண்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் இலக்கிய நாயகன்

சூரியகுமாரனிவன் சுந்தர மன்னனிவன்
பாரினை ஆண்டிட்ட பாண்டவர் சோதரன்
ஆரிவரென அறியாது அனைவர்க்கும்
வாரியே வழங்கிட்ட வற்றாத வள்ளலிவன்

குந்தியின் மைந்தனாய்க்குவலயம் வந்தவன்
சொந்தமே தெரியாத் தேரோட்டியாய் வளர்ந்தவன்
பந்த பாசம் விடப் பண்புடை நட்பினை
முந்தியே வைத்திட்ட முப்பெரும் வித்தகன்

அரண்மனைத் தூணெடுத்து அந்தணனுக்கீந்தவன்
அரணாய் அமைந்த கவச குண்டலமளித்தவன்
பரணிபாடிடும் பாங்கினைப் பெற்றவன்
தரணி போற்றிடும் தன்னிகர் நாயகன்

செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சென்னியும் துறந்தவன்
அஞ்சாமை கொண்ட அரும்பெரும் வில்வீரன்
பஞ்சரில் பார்த்தன் பகையையும் பெற்றவன் பண்பில்
விஞ்சுவிண் விசும்பின் முடியையும் தொட்டவன்.

வயிற்றில் சுமந்தவளே வாழ்க்கைக்கு எமனானாள்
பயிற்றுவித்தகுருவும் பறித்திட்டான் பலத்தை
உயிர் நீக்கும் போதும் உவந்தளித்தான் தருமத்தை
மயிர் நீங்கா மானெனவே மண்மீது சாய்ந்திட்டான்.

படைக்கஞ்சா வீரன் பரன் பகைக்காயானான்
கொடைக்கொரு பேராய்க்குவலயம் நிற்பவன்
தடையேது அவன்புகழ் தரணியில் நிலைத்திட?
எடைபோடும் என் நெஞ்சில் இருப்பவன் கர்ணனே!

சாரம் — ஆர். ஏ. நாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேக உலா.

எங்கள் வானில் நீல மேகம்
நாங்கள் பார்ப்பதில்லை
நிலவு காண்பதில்லை
போர் மேகங்கள்
வானை மறைத்துள்ளன
இடிமுழக்கம் கேட்பதில்லை
மின்னல் காண்பதில்லை
'பொம்பா' குண்டும்
'ஷெல்' வீச்சும் அமுக்கி விட்டன
செம்புலம் கலக்க மழைநீர்
பெய்வதில்லை செவ்விரத்தம்
மானுடத்தை அடித்துக்
கொண்டு ஆறாய்ப்பாய்கிறது
மூட்டைப் பூச்சியை
நசுக்கக் கூடாத
புத்தபிரான் நாடிது இருந்தும்
எங்கள் வானில் நீலமேகம்
நாங்கள் பார்ப்பதில்லை.

## எமது பயணங்கள்

மணி அடித்தால் சாப்பாடு
மலசலகூடம் நினைத்தால் பயப்பாடு
குழந்தைகுமரி கிழடு இல்லை வேறுபாடு
பனியில் நனைந்து வெய்யிலில் காய்ந்து
பாஸ் எடுத்தால் வெளிப்பாடு
நோய் நொடி துன்பம்
எல்லாமே இங்கு புறப்பாடு
விளங்குமோ எங்கள் துயர்ப்பாடு
நாங்கள் இருப்பதோ அகதிமுகாம்
எனும் சிறைக்கூடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதம்

அன்பே சிவம் சைவம்
அன்பே கடவுள் கிறீஸ்தவம்
அன்பே இன்ப ஊற்று
பௌத்தம்
அன்பே அல்லா இஸ்லாம்
நான்கு பெரிய மதங்கள் வாழும்?
நாட்டில்
மதம் பீடித்திருப்போரால்
வதைபடுவது
மக்கள் எனும்
மகேசன் பிள்ளைகள்.

## இன்றைய ஜனநாயகம்

பசிக்கு உணவில்லை
படுக்க இடமில்லை
நோய்க்கு மருந்தில்லை
அறிவுக்குக் கல்வியில்லை
அழிவிற்குப் பஞ்சமில்லை
உறவுக்கு ஒருவரில்லை
ஊரைப்பற்றித் தெரியவில்லை
ஒரே நாட்டில்
ஊர்களுக்குள் தொடர்பில்லை
ஐக்கிய நாடு எனும்
பேச்சுக்குக்குறைவில்லை
ஐக்கியமாய் நாம் வாழ
ஆவன செய்வாரில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் நாடும் நாடு

அன்பைத் தேடும் மக்கள் நிறைய
ஆட்சிப் பீடத்தில் அகிம்சை அமர
இன்பமாம் இறைவனை இதயங்கள் நாட
ஈனச் செயல் புரியா மறவர் உழைத்திட
உன்னத உண்மை உயர்ந்தே நிற்க
ஊக்கமும் ஆக்கமும் ஒன்றாகி விளைய
எண்ணும் எழுத்தும் கண்ணெனக் கருதும்
ஏற்றமிகு சமுதாயம் உருவாகி மலர
ஐயந்திரிபற அறிவு ஓங்கிட
ஒற்றுமையும் ஒழுக்கமும் சாலவே மிளிர
ஓலமே அறியாச் செந்நெறி தழைக்க
ஔவை ஓதிய நல்வழி நிலைக்க
நன்னாடாய் நம்நாடு நாளும் உருப்பெற
நாற்றிசையும் எம்புகழ் சாற்றியே பரவ
நிம்மதியாய் அதனில் நிமிடமேனும் வாழ்ந்திட
நெஞ்சமெல்லாந்துடிக்குதே நிறைவேறுமோ ஆசை?

## ஈழ மணித்திருநாடு

ஈழ மணித்திருநாடு எங்கள் நாடு
இசையுடன் சேர்த்து இனிய பண்பாடு
வேங்கை வென்றெடுத்ததிந்த வீடு
வீரமும் நெல்லும் விளைந்தாடும் காடு
சூழும் கடல் சுவர்ணத் தீவதனில்
சுதந்திரமாய் எழுந்ததுவே வாழிய நீடு!

ஆழ்கடலில் மீனாட அலைநடுவில் படகாட
வாழ்வளித்தோர் புகழ் வானாட வரும் பகைவெறி தள்ளாட
தாழ்விலாக் கொடியேறிப் புலியாட
தரணியில் தமிழர் தலை நிமிர்ந்தாட
ஊழ்வினை அறுத்து உயர்வினைத் தந்த
உற்ற தலைவன் ஆடுகிறான் உள்ளமதில்.

**(தமிழாலயம் ஜேர்மனி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருமம் வெல்லும்

புலி பாய்ந்தது புலிமீண்டது
கலிதீர்ந்தது கண்ணீர் நின்றது
வன்னி எங்கள் வன்னி
வளமான வன்னி வாழ்வோமினி
மாவீரர் வாழவைத்தாரெனச் சொல்லி
ஆனையிறவு எங்கள் சொந்தமானதடி
வானைமுட்டப் பறக்குது பார் புலிக்கொடி
தானை பல வந்தென்ன? தளபதிகள் நின்றென்ன?
சின்னஞ் சிறியர் எனச் செப்பி இகழ்ந்த
சேனை வென்றதடி
சேயர் களமாடிய செம்மை கண்டு
மாயமோவென மயங்குது நாடு
மாயமில்லை மந்திரமில்லைப் பாடு
ஆயனவன் ஆற்றலுக்கில்லை ஈடு
தருமம் வெல்லும் தமீழீழம் வெல்லும்
கருமம் ஆற்றியவன் கரிகாலன் அவன்
பெயரும் நிற்கும் பாரில் புகழும் நிற்கும்!

(களத்தில்)

## பிரபாகரன் பேர் கேட்டு

ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ
ஆரமுதே கண்ணுறங்கு ஆராரோ ஆரிரரோ
மரக்கிளையின் தொட்டிலிலே
மழைத்துளி நீரருந்தி
மல்லிகையே! வாடினாய் அன்று
வாட்டமினி இல்லைத் தூங்கு
வரமாக வந்தானடி
வாழ்வினைத் தந்தானடி
பிரபாகரன் பேர் கேட்டுப்
பிறைநிலாவே! நீ உறங்கு
அச்சமேன் உந்தனுக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கர்கள் ஓடிவிட்டார்
வச்சிரத் தூணாய் வல்லவனிருக்க
வளர்மதியே! கண்வளராய்
'ஷெல்' வந்த ஊரில் இனி நாமிரோம்
செல்வந்த நாடே எங்களதாம்
புல்லும் புனிதமாகும் புலிவீரர் கால்பட்டால்
பூங்கொடியே! சிரித்துறங்கு
சொந்த நிலத்தினில்
சோர்வில்லா உழைப்பினில்
சொர்க் கமது காண்போம்
சோபிதமாய் நீ உறங்கு.

## தாயவள் விலங்கு தகர்ந்தது

குயிலே! குயிலே! கூவிடுவாய்!
ஓயாத அலையின் ஓங்காரத்தை
மயிலே! மயிலே! நர்த்தன மாடு
புயலாய்ப் புகுந்தார் புலிகளென்று
கயலே! விளையே! கடல்புறாவே!
தயக்கமேனோ நீர் தாவியழைந்திட?
பயமே வேண்டாம் புள்ளினங்காள்
வயமாகும் வானமும் சிறுநாளிலே
ஒயிலாய் ஓடும் மான்கூட்டமே
பயிற்சி எடுக்க வாரீரெம் பாசறைக்கே
ஜெயங் கொண்டான் நிலங் கொண்டான் பிரபாகரன்
வெய்யதோர் பகைவென்றான்
தாயவள் விலங்கு தகர்ந்ததென்று
தாயகம் நம்கையில் வந்ததென்று
வையம் அறிய வானம் அதிரக் கவிபாடி
சேயர் நாம் சேர்ந்தே கூத்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாயிரத்தில் ஈழம்

இரண்டாயிரத்தில் ஈழம் எம்கையில் நம்புங்கள்
திரண்டிருக்கும் புலிமறவர் வீரத்தில் - வரண்டு
கிடக்கும் எங்கள் மணித்திருநாட்டின்
வடக்கும் கிழக்கும் இணையும்

தீரன் என்று பேர் பெறுவான் ஒரு நிலையில் நிற்பான்
வீரன் என்று பேர் பெறுவான் விவேகமுடன் செயற்படுவான் - பிரபா
கரன் என்று பேர் பெறுவான் பெருந்தலைவன் எமது
சிரமாகவே இருப்பான் என்றும்

நெல்விளையும் பூமியாகும் நித்தம் தொழில் நடக்கும்
புல்களையும் வேலையும்தான் சிறக்கும் - கல்வி
கற்றோரால் தமிழ் சிறக்கும் நன்மதி
பெற்றோரால் மண் சிறக்கும்

தற்கொடையானோர்க்குத் திருத்தலந்தோறும்
பொற்புடைப் பூசை பொழுதெலாம் நிலைக்கும் - கற்புடை
மாதரின் விழிநீர் வற்றிவடும் தும்பி
தாதவிழ் மலரைச் சுற்றிவரும்

மீனோடும் கடலில் படகுகள் தானோடும்
தேனோடும் கனிகள் கிளையில் நின்றாடும் - மானோடும்
காடு கழனிகள் செழித்திருக்கும் எம் தாய்
நாடுசெல்வம் கொழித்திருக்கும்

குழவியும் கிழவியும் கூடிமகிழ்ந்திருப்பர் எதிரியை
விழ வைத்த மறவரும் முகிழ்ந்திருப்பர் - இளம்
கன்னியும் காளையும் களித்திருப்பர் காலமெல்லாம்
தன் தலைவன் செயல் விழித்திருப்பர்

ஈழம் — ஆர். ஏ. நாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதி என்ற சொல் மறைந்துவிடும் அன்னிய நாட்டில்
புகுந்தோர் நிலைமாறிவிடும் - அகம்
குளிர்ந்தோராய் எம் தாய் நாட்டு மண்
புழுதியில் புரளும் நாளும் வரும்

நீதியும் நேர்மையும் நிலைத்திருக்கும் அன்பமைதி
சோதியும் சுடருமாய் ஒளிர்ந்திருக்கும் - ஆதியில்
இருந்திட்ட நல்லறங்கள் எமை ஆளும்
பெருந்துட்ட தீமையது மாளும்

முல்லைத் தீவு கிளிநொச்சி வன்னிமாவட்டம்
எல்லையதில் கண்ட வெற்றிகளைச் - சொல்லி
சரித்திரம் படைப்பார் சந்ததிக்கு நல்
உரித்ததைக் கொடுப்பார் காண்.

எம் தலைவன் பிறந்ததால் எம்நாடு சிறந்தது
எம்தலைவன் பிறந்ததால் இந்நூற்றாண்டு சிறந்தது -அவன்
சிறந்தோங்கி வாழவேண்டும் நீடு என்று
அறந்தாங்கிப்பா அமை இன்று

சமர் — ஆர். ஏ. நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை விதைகள்.

## சங்கர் (சத்தியநாதன்)

தங்கத்திரு நாட்டைத் தமிழீழத் தாயகத்தைச்
சிங்களச் சதியின் சீர்குலைவில் மீட்டெடுக்கப்
பொங்கு புலிப்படையின் பொற்கிரணம் ஒன்றதாய்
சங்கர் எனும் வீரன் சரித்திர நாயகனாய்
திங்கள் 'நவம்பரின்' இருபத்தியேழாம் நாள்
மங்காப்புகழுடன் மண்ணிடை வீழ்ந்ததை
நீங்கா நினைவாகத் திருமாவீரர் தினமாக
எங்கணும் வைத்திட்டான் எங்களருந் தலைவன்

## மில்லர்

பொல்லாப்பகைவனின் போக்கிரித்தனம் அழிக்க
நெல்லியடியில் அன்று நிகழ்ந்ததை அறியீரா ?
வல்லவன் வழிகாட்டலில் வளர்ந்திட்ட கரும்புலி
மில்லரை மறக்கும் மனிதரும் உண்டாமோ?
கல்லறை அடங்குவது காலமெல்லாம் உள்ள கதை
எல்லையேதோ புலிவீரர்க்குள்ள நெஞ்சுரந்தான் எனச்
சொல்லவே வைத்த சுடரொளியாம் அவன் மேதை
நல்லதாய்க் கிடைத்திடும் நாட்டில் நிலைத்திடுமே அவன் காதை

## அங்கயற் கண்ணி

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா
சங்கத் தமிழ் எடுத்துச் சாற்றினான் ஒரு கவி
பங்கம் வந்திடுமேற் பார்த்திருக்க மாட்டாள் காண்
எங்கள் குலம் உதித்த ஏந்திழையாள் என்றோதி
அங்கம் ஆவி அருந்திறன் ஆழி அரசனுக்குப்
பொங்கலிட்டுப் புது வரலாறாய் நிலைக்கின்றாள்
அங்கயற் கண்ணி என அமுதநாமம் படைத்து
வெங்களப் போரில் விதையான வீர மறத்தி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலீபன்

ஈராறு நாட்களாய் ஈரற்குலை கருகிட
நீராகாரம் கூட நினைத்தும் பார்க்காமல்
தேரோடிய வீதியில் தேய்ந்து சருகானான்
பேராகி நிற்கின்றான் பெரிய வல்லரசாம்
பாரத மாதாவின் பஞ்ச சீலர்களை
ஓராளாய் நின்று ஓர்ப்புடனே எதிர்த்து
சீராம் அவர் நாட்டின் காந்தீயம் அகிம்சை
பாரீர் இவையெனப் பாரினுக்கே காட்டியவன்
பாரதக்கீதையை இப்பார்த்திபனே உரைத்தான்
வாரீர் இவன் புகழ் வான்முட்டும் பாடுவோம்.

## கிட்டு

எட்டுத்திக்கும் எங்கள் புகழ் நாட்டினான்
தொட்டுத் தொட்டோடும் எதிரி நிலை வாட்டினான்
பட்டுநிகர் நெஞ்சினன் பகைவனின் வாழ்வுக்கு
எட்டிக் காயானான் எல்லாளன் நிகரானான்
வெட்டிய வீணர் தம் விலங்கு படுகுழியில்
தட்டி விழாதிருக்கத் தன்னைத்தானே தீயில்
சுட்டுக் கொண்டான் சூழ்கடல் நீரதன் மேல்
கட்டுக் கடங்கா வீரத்தின் சால்புறு வித்தானான்.

## மாவீரர் அஞ்சலி

கவிதை எழுதவா? காவியம் பாடவா?
புவி மீட்பாம் யாகத்தின் ஆகுதியானவர்க்குக்
கவிதை எழுதவா? காவியம் பாடவா?

பூபாளம் இசைக்கவா? புது ராகம் அமைக்கவா?
ஆபாசமழித்து அறவழியில் நின்றவர்க்குப்
பூபாளம் இசைக்கவா? புது ராகம் அமைக்கவா?

சாரம் — ஆர். ஏ. நாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னித் தமிழ்ச் சொல்லால் கலம்பகம் பாடவா?
கன்னியராம் காளைகளாம் கண்மணிகாள் உங்களுக்குக்
கன்னித் தமிழ்ச் சொல்லால் கலம்பகம் பாடவா?

நாலடிச் சீரில் நாற்றிசையும் போற்றவா?
காலடி மண்ணெடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு
நாலடிச் சீரில் நாற்றிசையும் போற்றவா?

வெண்பாவாம் செய்யுளில் வேதனையை வடித்திடவா?
நண்பராய் பிள்ளையாய் நெஞ்சில் நாளும் நிலைத்தவர்க்கு
வெண்பாவாம் செய்யுளில் வேதனையை வடித்திடவா?

செந்தமிழ்த்தேனெடுத்துச் சிந்துக்கவி தீட்டிடவா?
வந்த பகைவரை வாட்டியே ஓட்டியோர்க்குச்
செந்தமிழ்த்தேனெடுத்துச் சிந்துக்கவி தீட்டிடவா?

பாயிரம் பாடியே பாமாலை சாற்றிடவா?
ஆயிரம் எதிரியை அஞ்சாதொழித்தவர்க்குப்
பாயிரம் பாடியே பாமாலை சாற்றிடவா?

சந்தங்கள் எடுத்துச் சரமாய்த் தொடுக்கவா?
எந்தை மண்ணுக்காய்ப் பந்தம் விடுத்தவர்க்குச்
சந்தங்கள் எடுத்துச் சரமாய்த் தொடுக்கவா?

அந்தாதிப்பூப்போட்டு அருச்சனைகள் செய்திடவா?
அந்தமே இல்லா அரும் வீரர் உங்களுக்கு
அந்தாதிப்பூப்போட்டு அருச்சனைகள் செய்திடவா?

அறம் பாடி எதிரி ஆவியைப் போக்கிடவா?
மாவீரர் மாண்பினை மக்களுக்கே சொல்லி
அறம் பாடி எதிரி ஆவியைப் போக்கிடவா?

ஆசுகவி பாடி எம்மாசுகளைக் களையவா?
தேசத்து வேரும்மைச் சிறிதும் மறந்திடாது
ஆசுகவி பாடி எம்மாசுகளைக் களையவா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றுவது எங்ஙனம? நாம் சாற்றுவது எங்ஙகனம்?
காற்றுடன் கடலுடன் எம்மூச்சுடன் கலந்துவிட்ட உம்மைச்
சாற்றுவது எங்ஙனம்? நாம் சாற்றுவது எங்ஙனம்?

பொற்பாதம் பணிகின்றோம் உம் பொற்பாதம் பணிகின்றோம்
தற்கொடையாய்த் தந்தீரே தங்கத் திருநாட்டிற்காய்
பொற்பாதம் பணிகின்றோம் உம் பொற்பாதம் பணிகின்றோம்

(தமிழாலயம் ஜேர்மனி)

## வாழ்க! வாழ்க நீ!

உன்னொரு மனதில் எங்களின் நினைப்பு
எம்கோடி மனதில் உந்தனின் இருப்பு
வாழிய! வாழிய! வாழிய நீடு!
வாழிய! வாழிய! வாழ்க பல்லாண்டு!
வாழ்வின் விடியலுக்காய்
வேலு தந்த பிரபாகரனே! நீ வாழ்க!
ஆழி சூழ் உலகு உள்ளளவும்
ஆதவனே! நீ வாழ்ந்திருப்பாய்
பாழினை அழித்திட்ட பகலவனே!
பாரினில் எம்முகம் பதித்தவனே!
ஆழ்கடல் முத்தென உதித்தவனே!
ஆயிரம் காலம் வாழ் ஆதித்தவனே!
சோழன் இராஜராஜன் மீண்டும் பிறந்தானா?
சோதிக் கரம் நீட்டிச் சூதினைத் துடைத்தானா?
கதிரவன் நீ! கரிகாலன் நீ!
எதிரியும் ஏத்தும் பரிதியும் நீ!
திங்களை மணந்த ஞாயிறு நீ!
எங்கள் மண்ணின் சூரியன் நீ!
என்றும் தமிழரின் தினகரன் நீ!
என்றென்றும் வாழ்ந்திடும் அருணனும் நீயே!
வாழ்க! வாழ்க நீ! வளர்க நின்புகழ்!
(ஐ பீ சி வானொலி)

சரம் — ஆர். ஏ. நாயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழிவை அழித்தவர்கள்

மாவீரரே!
உங்கள் மரணம்
மரணித்து விட்டது
உங்கள் கல்லறைகள்
புலிவீரர் கருவறைகள்
உங்கள் வீரம்
வீரத்தின் இலக்கணம்
உங்கள் காற்றடங்கள்
காற்றின் தடங்கள்
உங்கள் புகழ்
புகழுக்கே விழுந்த மாலை
உங்கள் தியாகத்தின் தன்மை
எம்வாக்குக்கு எட்டா மேன்மை
நீங்கள் அழிக்கப்பட்டவர்களல்ல
அழிவையே அழித்து நிற்பவர்கள்
நீங்கள் பட்ட அரும்பாடு
தங்கத் தமிழ்த் திருநாடு
நாம் உமக்கேற்றும் விளக்கு
நீர் எமக்கீந்த விடியலின் கிழக்கு
உம் ஈகத்திற்குத் தரும் வணக்கம்
நிதம் ஈழத்தின் மல்லிகையாய் மணக்கும்!

**(தமிழாலயம் ஜேர்மனி)**

## எம் மன்னவன்

திருவாகக் கருவினிலே
உருவானவன்
செருக்குற்ற பகைக்குச்
சீறும் புலியானவன்
நெருப்பாற்றின் மத்தியிலும்
நீந்தக் கற்றவன்
விருப்பாகத் தமிழீழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனைக் கொண்டவன்
பெருமைக்கும் புகழுக்கும்
உரித்தானவன்.
கருமை களைந்தெமக்கு
ஒளி தந்தவன்
வருகின்ற தலைமுறையின்
வேரானவன்
வரலாற்றைச் சமைக்கின்ற
பேரானவன்
தருவாகித் தமிழர்க்கு
நிழல் தருபவன்
பிரபாகரன் எனும் பெயர் கொண்ட
எம் மன்னவன்.
**(ஐ பீ சி வானொலி)**

## எங்கள் கரிகாலன்

கல்லணை கட்டினான் கரிகாலன் அன்று
காலங்கள் கடந்தும் நிலைத்திருக்க வென்று
நல்லணை கட்டுகிறான் கரிகாலன் இன்று
நாளும் தமிழர்க்குத் துணையாக நின்று
எரிதழல் நின்று தப்பிக் கரிகாலனானவன் அவன்
எரிதழலாகி நின்று எதிரிக்குக் காலனானவன் இவன்
சோழநாட்டரசருள் சிறந்தவன் அவன்
ஈழ நாடெடுக்கப் பிறந்தவன் இவன்
தமிழர் சரித்திரத்தில் நிற்கிறான் அவன்
தமிழர் சரித்திரமாகி நிற்கிறான் இவன்
திருமாவளவன் அவன்
பிரபாகரன் இவன்
அவனுக்கு இணையாக இவனைக் கொள்ளலாம்
இவனுக்கு இணையாக யாரைச் சொல்லலாம்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டுடைத் தலைவன்

பாட்டுடைத் தலைவனிவன்
பரணி பாடும் பாங்குடையன்
நாட்டினைக் காத்திடும்
நல்லதொரு காவலன்
வேட்டுவைத்தே எதிரியை
வீழ்த்திடும் வித்தகன்
வாட்டும் கொடுமை நின்று
வாழவைத்தான் எம்மினத்தை
ஊட்டுகின்றான் தமிழர்க்கு
உயர் மறவ மானத்தை
காட்டுகின்றான் புறநானூறுக் காட்சியை
கவிவடித்திடக் கம்பன் இங்கில்லை
தேட்டம் இவன் எங்களுக்குத்
தேடி வாழ்த்த வார்த்தையில்லை
கொட்டி முழக்கிடுவோம்
கோவில்களில்கும்பிடுவோம்
கெட்டியாய் இவன் ஆயுள்
கேடின்றி நிலைப்பதற்கு !

(T R T வானொலி)

சாரம் – ஆர். ஏ. நாயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

இறைவா! உன்னிடம்
ஒரு பணிவான
வேண்டுகோள்
நொருங்கிய
உள்ளம் ஒன்றின்
நொந்து போன
மன்றாட்டு
அன்பு செய் என்று
இனி ஒருவருக்கும்
சொல்லாதே
அன்பு செய்ததால்
நீ அனுபவித்தது
உனக்கே தெரியும்
நான் அனுபவிப்பது
உனக்கும் எனக்கும்
தெரியும்
நீ கடவுள்
தாங்கிக் கொண்டாய்
நான்?
அன்பை விதைத்தால்
துன்பத்தை அறுவடை
செய்ய வேண்டும்
என்று தெரிந்ததால்
இன்றைய உலகம்
அன்பைப் புறக்கணித்து
ஓரங்கட்டித்
தள்ளிவிட்டது
பாவம் உலகம்
பிழைத்துப் போகட்டும்
விட்டு விடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலை வேள்வியில் விளைந்த சமாதானம்

விடுதலைக்காய் விலைகள் பல கொடுத்தோம்
வீரரின் குருதியால் வெஞ்சமர் தொடுத்தோம்
கெடுதலை புரிந்தவர் கேட்டின் கொடுமுடியில்
கேவலம் நாங்கள் துயரத்தின் பிடியில்
பிஞ்சுகள் சிதறின பெரிசுகள் ஓடிந்தன
பெண்மானம்குதறப் பெருமைகள் மடிந்தன
நஞ்சுக் கழுத்தினர் நாட்டையே நினைந்தனர்
நாளுந் தியாகத் தீயினில் நனைந்தனர்
ஓயாத அலைகள் ஓங்கியே அடித்தது
ஒவ்வொரு வெற்றியும் எம்மையே பிடித்தது
சாயாத ஆனையிறவு சரிந்தது எம்வசம்
தலையும் நிமிர்ந்தது தாயகத் தேசம்
மாயமிது வென மலைத்தது சிங்களம்
மாற்றான் மமதைக்குப் பாடினோம் மங்களம்
வாய்த்தது வாகாக விமானப் படைத்தளம்
வையம் அறிந்தது வரிப்புலி தீரம்
தொலைந்தது சிறீலங்காப் பொருள் வளம்
தொடர்ந்தது பகையவன் சோதனைக் களம்
கலைந்தது பேரினவாதக் கனவு
களைத்த அரசு காலடி வந்தது
புரிந்துணர்வு போர் நிறுத்தமெனப்
புதுமைகள் நடந்தன பாதைகள் திறந்தன
வரிந்து நின்றும் வாதைகள் தீரவில்லை
வளமிக்க வாழ்வோ திரும்பவில்லை
அமைதிப் பேச்சுக்கள் அடுக்கடுக்காய் நடக்குது
அரசும் நன்றாய்த் தன்பலம் பெருக்குது
சுமைகள் பல இன்னும் எமக்குத்தான்
சுதந்திரமானது எப்போ பிறக்குந்தான்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மையின் தவிப்பு.

ஓடும் மேகங்களே
ஓருதவி செய்வீரோ!
வாடும் என் மனநிலையை
வண்ண மகனிடம் சொல்லீரோ?
நீலவான் நீந்திடும் நிலவே! நீ
நீலக்கடலிடை நீந்தும் கலந்தனில்
நிர்மலனாம் நேசமகனையே கண்டு
ஈராறு மணித்துளிக்குள் உனை
பாராது பரிதவிக்கும் தாயைக்
கண்டேன் எனக்கூறாயோ?
என்மூச்சில் நின்றெழுந்து
ஏழூர்கள் தாண்டிச் சென்று
சிறுமகன் முகத்தில்
சீறிடும் மென்காற்றே!
உப்பு நீரால் என்மகனை
ஒன்றும் செய்திடாதே
மெத்தெனவே நீ பட்டு
மென்முகத்தின் வேர்வைதனை
ஒத்தியே எடுத்துவிடு
ஓதிடுவேன் உந்தனுக்கு
செல்வமகன் அவன்
சிந்தையில் நின்றாடும்
சேதிகளைக் கேட்டு வந்து
என்னிடமே சொல்லிவிடு
கள்ளங் கபடமற்றுக்
கலகலக்கும் அவன் நிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தாகச் சிரிக்கும்
முகத்தின் அழகுதனைக்
கொத்தியே படம் பிடிக்கும்
கோடித் தாரகைகாள்
பித்தான என் கண்முன்னே
பேசும் படமாய்க் காட்டரோ?
வந்திடுவான் வந்திடுவான்
வண்ணமுறும் எந்தன் மகன்
எண்ணி ஐந்து நாட்கள் தனில்
ஏக்கமுறும் என் மனமே
பார்த்துக் களித்திடுவாய்
பதறாமல் இப்போ இரு
நீள் பிரிவை நீ
எப்படித் தாங்கிடுவாய்?
நிலைமை உணர்ந்திருந்திடுவேன்
என்றாயே நான் நம்பேன்
நான் நம்பேன் உன்பேதலித்த பெண் மனதை
நீர் காணாப் பயிர்போல்
நீ வாடியே மடிந்திடுவாய்
உன் பிள்ளை அருகிருக்க
உன் அகமெல்லாம் நிறைந்திருக்க
ஆண்டவனை வேண்டிடுவாய்
அருள்வான் நீ விரும்புவதை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண் + அவர்

களங்கமில்லா உள்ளங் காட்டும் உன்புன்னகை
எதுவென்றால்
பால்வடியும் மழலை வாய்க்குமிண் சிரிப்பாம்
உன் அணைப்பின் இதத்தை என்னென்பேன்
பனிக்குளிரதன் பின்வரும்
காலையிளங்கதிரின் கதகதப்பே அது
பாலைவனக் கடுங்கோடை நின்கோபமென்றால்
அங்கு வளர் பேரீந்தின்
இனிமையே உன்குணமாம்
எனக்காக வாழும் உன் அன்பின் எல்லை எது ?
தனக்காக வாழாத் தாயின் கருணை அது
எட்ட இருக்கும் உன் பிரிவு எட்டிக் காயென்றால்
என் நெஞ்சில் நிற்கும் நின்முகம்
தேனினுமினிதே.

## ஒன்று + ஒன்று = ஒன்று

எங்கள் நெஞ்சங்கள் ஒன்று
எங்கள் நினைவுகள் ஒன்று
எங்கள் பாசங்கள் ஒன்று
எங்கள் ஆசைகள் ஒன்று
எங்கள் வாழ்வு ஒன்று
எங்கள் வழிகளும் ஒன்று
பிரிவின் வேதனை ஒன்று
பரிவின் ஆதங்கம் ஒன்று
ஆன்மாவின் தொடுகைஒன்று
ஜீவனின் விடுகையும் ஒன்றானால்
எத்துணை நன்று
'எனைப் போல வாழ்ந்தவர்கள் குறைவு
என் இறைவன் தந்ததிந்த நிறைவு'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவு

*பார்க்க மனம் துடிக்குது*
*பாசம் மிகு பிள்ளைகளை*
*ஆர்ப்பரிக்கும் அலைகடல்*
*துள்ளுவது இதயத்திலே*
*வார்த்த சிற்பங்கள்*
*வாடிய மலர்களாய்*
*சோர்வது தெரிகிறது*
*சோகம் நிறை விழிகளில்*
*சின்னச் சின்னப் பூக்களாய்ச்*
*சிரிக்கின்ற பேரர்கள்*
*என்னைத் தேடுவாரோ?*
*என்ன செய்கின்றாரோ?*
*பின்னிடும் சிறகில்லையே?*
*பிரிவின்றிப் பறப்பதற்கு*
*என்ன செய்வேன்?*
*எப்போது சந்திப்பேன்?*

## வரவு

*தொட்டிலாக ஆடி என்னைத்*
*தூங்க வைத்த படகு*
*கட்டித் தழுவிய காதற்*
*கதிரவனைக் கன்னம் சிவக்கத்*
*தொட்டு முத்தமிட்ட வானழகு*
*தொடர்ந்து மின்னிய விண்மீன்*
*பொட்டுக்களாய்ப் பொதிந்து நின்று*
*புன்னகை புரியு தெனைப் பார்த்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளி எழும் அலைகளால் பயங்கரமாய்
தூக்கி எறியப்பட்ட படகு
அள்ளி வந்தவர்களை அரக்கன்
அழிக்கையில் ஓடியகுருதி
எள்ளளவும் என் நினைவில் எழும்பாமல்
என்மனம் மகிழ்வதேன்?
பிள்ளைகளைப் பார்ப்பேன் என்ற
பெரும் ஆவல் காரணமா?

## உணர்வுக்கு மூடுவிழா

உண்மையின் உறைவிடமே!
உள்ளத்து உணர்வுகளே!
உறவாடும் நினைவுகளே!
உங்களுக்கெல்லாம் கல்லறை
இன்பவேதனையுடன் பிரசவிக்கும்
என் அன்புக் கவிதைக்குஞ்சே
துன்ப வேதனையுடன் உனக்கு
என் உணர்வுகளுக்கு மூடுவிழா
என் ஆற்றாமை ஒரு பெருமூச்சாக
என் வேதனை இரு நீர் சொட்டாக
என் மகிழ்ச்சி உதட்டினின்று
வெளிப்படாத புன்னகைக் கீற்றாக
ஆம் கவிதையாக இல்லாமல்
வெளியேறட்டும்
இது ஒரு கவிதையென்றால்
இதுவே கடைசியாக இருக்கட்டும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடுகள்

இறைவா!
என் கேள்விக்கு
விடை தருவாயா?
அன்பு செலுத்து என்றாய்
செய்தேன்
வன்முறையால் வதைக்கின்றார்கள்
இரக்கம் காட்டு
என்றாய்
காட்டினேன்
அரக்கராய் மாறுகின்றனர்
பொறுமையாயிரு என்றாய்
இருந்தேன்
எருமையாய் நினைந்து
ஏளனம் செய்கின்றனர்
மக்கள் மேல்
பாசம் வைத்தாய்
வதைபட்டாய்
நானும் என் மக்கள் மேல்
பாசம் வைத்தேன்
பலன்?
மூன்று நாள் நீ
பாடுபட்டாய்
முப்பொழுதும் படுகின்றேன்
உன் சிலுவை கல்வாரி மட்டும்
என் சிலுவை
கல்லறை மட்டும்
மூன்றாணிகளில்
தொங்கினாய்
முன்னூறு ஆணிகளால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையப்படுகிறேன்
உன்னிதயம் குத்தப்பட்டது
ஒரு முறை
என்னிதய நரம்புகளைப்
பிய்த்தெடுத்து
அழகு பார்க்கிறார்கள்
உன் பாடுகள்
முடிந்து விட்டன
என் பாடுகள்?

## மனித இலக்கணம்.

விதம் விதமாய்
முகமூடி அணிந்து
பற்பல பாத்திரம் ஏற்று
உலக மேடையில்
நடிப்பவன் மனிதன்
முகமூடி போட
விருப்பின்றி
நடிப்பதற்குத்
திறமையின்றி முழித்துக்
கொண்டு நிற்பவன்
முட்டாள்.

## நன்றி

அன்புத் தெய்வத்திற்கு அருமைப் பெற்றோருக்கு
இன்னுயிரை மண்ணுக்காய் ஈந்த மறவர்க்கு
மன்னுபுகழ் சூழ்கின்ற மாண்பு மிகு தலைவனுக்கு
தன்னலங்கருதாதுதவிய தகையோர்க்கு
அன்னியராம் எம்மை ஆதரித்த நாட்டினுக்கு
என்னிதய நன்றி என்றென்றும் உளதாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் கதை சொல்லும் சரம்



ஆர்.ஏ.நாயகி
ஆருக்கும் தெரியாமல்
மார்புக்குள் புதைத்து வைத்து
காலத்தால் அழியாக் கவி படைத்தார்
யாழ்ப்பாணக் குருநகரில்
பூப்போல வந்துதித்து
விருப்போடும் துடிப்போடும்
களிப்புடனே பணிபுரிந்து
மதத்திற்கும் - ஊர்
சிறப்பிற்கும்
உளத்திற்கும் - கல்வி
வளத்திற்கும்
திறத்தோடு அரும்பாடுபட்டார்
தன் தேசம் பிரிந்து
அந்நியரின் தேசத்துள்
ஆட்பட்டுக் கிடந்து
நேசத்தில் தேசமும்
சுவாசத்தில் வேதமும்
எண்ணத்தில் மனிதமும்
கன்னத்தில் ஈரமுமாய்
கனன்று வெடித்து
அனலாய்த் தெறித்த உணர்வுகளை
அழகாய்க் கோர்த்து
சரமாய்த் தந்தனள்.
சரத்தின் முத்துக்கள்
ஆயிரம் கதை சொல்லும்

- கரையோரக் கறுப்பன் -

LPH - 2520447

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org